அலகு 7

# அரசியல் சிந்தனை

## 7.1 பிளாட்டோ (Plato)
## (கி.மு (பொ.ஆ.மு.427 – (கி.மு) பொ.ஆ.மு.347)



- சாக்ரடீசின் மாணவர்
- அகாடெமியைத் தோற்றுவித்தார் – இது முதலாவது உயர்கல்வி நிறுவனமாகும்.
- தற்பொழுது வரை தனது படைப்புகள் நீடித்திருக்க கூடிய முதலாவது மேற்கத்திய சிந்தனையாளர்.
- சாக்ரடீசைப் பற்றி நாம் அறிவதன் பெரும் பகுதி பிளாட்டோவின் படைப்புக்களால் ஆகும்.
- இவ்வுலகைப் புரிந்துகொள்ள கணிதம் அடிப்படையானது என்ற பிதாகரசின் கருத்தினை ஏற்றுக்கொண்டார்.

### கற்றலின் நோக்கங்கள்

- பிளாட்டோவின் அரசியல் சிந்தனையைப் புரிந்துகொள்ளுதல்.
- அவரின் சிந்தனையைத் தற்கால சூழலில் செயல்படுத்துதல்.
- அரசு, அரசாங்கம், நீதி, கல்வி, பொதுவுடைமை பற்றிய பிளாட்டோவின் கருத்துக்கள் மீதான அறிவைப் பெருக்குவதாகும்.

பிளாட்டோ கி.மு. 427–ல் பிறந்தார். இவர் கிரேக்க நகர அரசில் உள்ள ஏதென்சில் பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் இயற்பெயர் 'அரிஸ்டோகிள்ஸ்' (Aristocles) என்பதாகும். இது அவருடைய தாத்தாவின் பெயராகும். சில வரலாற்று அறிஞர்கள், பிளாட்டோவின் பயிற்சியாளரான ஆர்காசின் அரிஸ்டன் (Ariston of Argos) என்பவர் பிளாட்டோவின் பரந்த உடலமைப்பின் காரணமாக அவரை 'பரந்த' எனப்பொருள்படும் 'பிளாட்டோன்' (Platon) எனப்பெயரிட்டு அழைத்ததாகக் கூறுகின்றனர். இவர் கிரேக்கத்தின் முன்னணித் தத்துவ ஞானிகளில் ஒருவரான சாக்ரடீசின் சீடராவார். இவருடைய காலத்தில் கிரேக்கத்தின் நகர அரசான ஏதென்சின் அரசியல் வாழ்வு பெரும் குழப்பம் நிறைந்ததாக இருந்தது. இதன் விளைவாக ஏதென்சின் அரசாங்கம் சாக்ரடீசின் போதனைகளுக்காக அவருக்கு மரணதண்டனை அளித்தது. இது பிளாட்டோவின் ஏதென்ஸ் அரசியல் பற்றிய பார்வையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது.

பிளாட்டோ தனது 'அகாடெமியை' (Academy) பொ.ஆ.மு.387ஆம் ஆண்டுவாக்கில் தோற்றுவித்தார். அக்காலத்தில் ஏதென்சின் மிகவும் புகழ்வாய்ந்த நபரான 'அகடெமோஸ்' (Akademos) என்பவரின் பெயரால் 'அகாடெமி' அமைந்தது. இதில் பிளாட்டோ அரசியல், நன்னெறி, கணிதம் மற்றும் சமூகவியல் ஆகியவற்றை உள்ளடக்கிய அரசியல் தத்துவத்தினைப் போதித்தார்.

### பிளாட்டோவின் படைப்புகள்

குடியரசு (The Republic) (கி.மு 386), ராஜதந்திரி (The Statesman)–(கி.மு360) மற்றும் சட்டங்கள் (The Laws)–(கி.மு 347) ஆகியவை பிளாட்டோவின் மூன்று